விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 332 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 30 வியாழக்கிழமை (16.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### யாழில் கடந்த 24 மணி நேரத்தில்

## 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மான மழைவீழ்ச்சி பதிவாகி யுள்ளதாக யாழ்ப்பாண பிராந் தியவளிமண்டலவியல்திணைக் கள பொறுப்பதிகாரி த.பிரதீ பன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்றுக் காலை 8.30 மணி வரையான மழைவீழ்ச்சி பதிவை அடிப்படையாகக் 15

## தகுதியற்ற எம்.பிக்களை பதவி நீக்கம் செய்யும் வகையில் புதிய சட்டம்

### சபையில் நீதி அமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

உத்தேச பாராளுமன்ற தர நிலை சட்டமூலம் நடை முறைக்கு வந்தப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றவர்களை நீக்க முடியும் என நீதி அமைச் சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சில் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து 04

### பொருளாதார நெருக்கடிக்கு

# ஒரே பட்ஜெட் மூலம் தீர்வு காண முடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரே வரவு செலவுத் திட்டத்தில் தீர்வு காணமுடியாது எனவும் நெருக்கடிக்கு ஏற்ப தீர்வு காண வழிமுறைகளை மாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

### வங்கக்கடலில்

## காற்றழுத்த தாழ்வு நிலை

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கக் கடல் பகுதி யில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக் களம் நேற்று அறிவித்துள்ளது.

இதன்படி, மத்திய வங்கக் கடலில் பயணிக்கும் பல நாள் மீன்பிடி 15

## 21 இந்திய மீனவர்கள் விடுதலை

### ஒருவருக்கு சிறைத்தண்டனை

13ஆம் பக்கம் பார்க்க

### 22 மில்லியன் மக்களுக்கும்

## இழப்பீடு வழங்க தேவையான பணம் ராஜபக்ஷ தரப்பிடம் உண்டு - சுமந்திரன்



(கொழும்பு)

நாட்டில் உள்ள 22 மில்லி யன் மக்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு தேவையான பணம் ராஜபக்ஷ குடும்பத் தினரிடம் இருப்பதாக பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் இரண் டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அத்துடன் நாட் டில் ஏற்பட்டுள்ள 15

### மற்றுமொரு ஆய்வுக் கப்பல்

## இலங்கையிடம் அனுமதி கோரிய சீன அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பின் விசேட பொருளாதார வலயத்தை ஆராய்வதற்காக மற்றுமொரு ஆய்வுக்கப்பலை பயன்படுத்து வதற்கு இலங்கையின் அனு மதியை சீனா கோரியுள்ளது.

இம்முறை சீனா Xiang Yang Hong 03 எனும் கப் பலை அனுப்பவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி முதல் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை இந்த ஆய்வு முன்னெடுக்கப்படவுள்ளது. Xiang Yang Hong 03 கப்பல் சீனாவின் 15

## 2024 பட்ஜெட் தொடர்பில் ஐ.எம்.எப் மௌனம்

(கொழும்பு)

இலங்கையின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இதுவரை எந்தவொரு கருத்தையும் முன் வைக்கவில்லை என ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் மேற் கொண்ட ஒப்பந்தத்துக்கமைய வரவு செலவு திட்டம் தயாரிக் கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் 04

## நூறு புதிய பொருட்களுக்கு வற் வரி அறவீடு

(கொழும்பு)

வற் வரி அறவிடப்படாத 100 பொருட்களுக்கு வற் வரி அறவிடப்படப் போவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று தெரி வித்தார்.

வரவு செலவு 15

## ஐ.எம்.எப் கடுமையாக அழுத்தம் கொடுத்தது

### சபையில் அமைச்சர் நிமல்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அதிக நெருக் கடியை கொடுப்பதாக அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.எம்.எப் நிபந்தனை களின் காரணமாகவே மின் சாரம் மற்றும் தண்ணீர் கட் டணம் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அமைச் 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் கணித
பாட ஆசிரியர்

## திரு. கார்த்திகேசு ரிஷிகேசன்

NDT, BED


அவர்கள் 16.11.2023 முதல் இலங்கை அதிபர் சேவை தரம் - III இல் நியமனம் பெற்றமையை முன்னிட்டு அவரது பணி சிறப்புறவும் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெறவும் மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/பண்ணாகம்
மெய்கண்டான் ம.வி

(17896)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
செல்வி எலிஸ் ஏஞ்சல்ஸ் அவர்களின்
அன்புத் தந்தை

## எஸ்.என்.ஜே. மரியாம்பிள்ளை

அவர்கள் (15.11.2023) நேற்று காலமானார்.
அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.

(17893)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 11 - 1948



மறைவு
14 - 11 - 2023

## இராசையா சண்முகராஜா

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 449/9 ஆம் யூனிற் தருமபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சண்முகராஜா நேற்று முன்தினம் (14.11.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரசேகரம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் ஞானசிங்கம், நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவராஜா (முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ), ஜெயராஜா (பிரான்ஸ்), திருமகள் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெயந்திமாலா, புஸ்பஜீவா, கெங்காசுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்சா, விதுசா, பானுசா, தாகிசா, பாதினியன், பவித்திரன், கபானு, விரோஸ், முனீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆசிரா, ஆகிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் யோகேஸ்வரி, குலசேகரம், சதாசிவம், காலஞ்சென்ற சிவபாலன், காலஞ்சென்ற சிவப்பிரகாசம், புஸ்பராணி, தங்கவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.11.2023) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் மகன் ஜீவராஜாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தருமபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

# ஒரே பட்ஜெட்...

கொழும்பு பல்கலைக்கழக வர்த்தக நிர்வாக முதுகலைப் பட்டதாரி பட்டதாரிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த '2024 வரவு செலவுத் திட்டப் பேச்சு' நிகழ்வில் நேற்று ஷங்ரிலா ஹோட்டலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தை முதலில் நடைமுறைப்படுத்தி அதன் பின்னர் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மாறிவரும் சூழலை மாற்றுவதன் மூலம் நெருக்கடிக்கு வெற்றிகரமான தீர்வுகளை காணமுடியும் எனவும் அதே முறை இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் மிகவும் முக்கியமானது எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

புதிய சமூகத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையாக வேலையின்மை நலன்களுக்காக ஒதுக்கப்படும் தொகை மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)


மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7645)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 4.11.2023 இல் அதிபர் சேவை தரம் III இல் நியமனம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்

## திரு. பொன்னையா முரளீதரன்

B.A, PGDE, MEd,
S.L.P.S III

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற மனதார வாழ்த்துகிறோம்.

Best Wishes!

வாழ்த்துவோர் :
பாடசாலை சமூகம்
யா/கோண்டாவில்
பரஞ்சோதி வித்தியாலயம்

(C-7647)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.பாலகிருஸ்ணன் தணிகைவேள்

முதுகலைமாணி (BEd, Dip.in.Phy.Edu., Sp.Trd(Phy.Edu),MEd(2nd Lower)



## திரு.வல்லிபுரம் திருக்குமாரன்

BEd, Sp.Trd(Maths), MEd
இலங்கை அதிபர் சேவை தரம் III

எமது பாடசாலையில் கடமையாற்றி இலங்கை அதிபர் சேவை நியமனம் பெற்று இன்று பதவியுயர்வு பெற்றுச் செல்லும் எமது கணித பாட ஆசிரியர் திரு. வல்லிபுரம் திருக்குமாரன் அவர்களையும் எமது பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியராக கடமையாற்றி தற்காலிக இடம்மாற்றம் பெற்று யா/நெல்லியடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் கடமையாற்றும் திரு. பாலகிருஸ்ணன் தணிகைவேள் ஆசிரியர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி MEd(2nd Lower) பட்டத்தினைப் பெற்றமையை இட்டு எமது பாடசாலை சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல பதவியுயர்வுகளையும் பட்டங்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

(C-7648)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், பணியாளர் நலன்புரிச் சங்கம்
யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை,
வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் தொடரும் கனமழை

# 127 குடும்பங்கள் பாதிப்பு

### யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு

**(யாழ்ப்பாணம்)**

**தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக யாழில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 447 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.**



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 59 குடும்பங்களைச் சேர்ந்த 197 அங்கத்தவர்கள், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொலிகண்டி பகுதியில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 163 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதியில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், உடுவில் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 9பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார். (நி-5-6-33-104)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

16.11.2023 இன்று அதிபர் சேவை தரம் III இற்கு நியமனம் பெற்றுக்கொள்ளும் எமது ஆசிரிய நண்பர்களான



திரு. M.கஜீபன்
NDT,B.Ed



திருமதி.N.சந்திரிக்கா NDT,
BA.(Hons) PGDE,MEd(Hons)



திரு.S.கோகிலன் NDT,
B.A, PGDE,MEd(Hons)



திரு.A.சுரேஷ்காந்
B.Sc, PGDE



திரு. T.கபிலன்
B.Sc,Bth,NDT



திரு. V.மயூரன் B.A (Hons)PGDE,
(Merit),M.A,M.Ed(Hons)



திரு. T.முகுந்தன் B.com(Hons)
PGDE,M.Ed



திரு. S.இளந்திரயன் B.A(Hons)
M.A(Hons),PGDE,MEd(Hons)


ஆகியோரையும் மற்றும் எமது பாடசாலையிலிருந்து மாற்றம் பெற்று வேறு பாடசாலைகளுக்குச் சென்ற ஆசிரியர்களான திரு.த.அங்கசன், திரு.சு.பிரகலாதன், மிதிரு.தெ.குமணன் மற்றும் நீண்ட நாள் சம்பளமற்ற விடுப்பில் இருக்கும் திரு.T.லம்போதரன் ஆகியோரையும் பணிசிறக்க மனமுவந்து வாழ்த்துவதோடு மென்மேலும்பல பதவிகள் பெற்று பணியாற்ற கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(17888)

வாழ்த்துவோர்- ஆசிரிய சகோதரத்துவம் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சதங்களின் 'நாயகன்' ஹோலி வேகத்தின் 'தவப் புதல்வன்' ஷமி

## 'வான்கடே' வானில் பறந்தது இந்திய 'கொடி'

உலகக்கிண்ணத்தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்திய் அணி ஜோராக முன்னேறியது. சதம் விளாசிய ஹோலி, 7 விக்கெட் சாய்த்த ஷமி வெற்றி நாயகர்களாக ஜொலித்தனர். நியூசிலாந்து அணி வெளியேறியது.

இந்தியாவில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த முதல் அரையிறுதியில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோகித் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இரு அணியிலும் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.



இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் - சுப்மன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. எதிரணி பந்துவீச்சை வழக்கம்போல ரோகித் அடித்து நொருக்கினார். சௌதி பந்து வீச சில் ஒரு பவுண்டரி, சிக்சர் விளாசினார். இவர் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின், இணைந்த சுப்மன், கோலி சிறப்பாக ஆடினர். அரை சதம் கடந்த சுப்மன் 'ரிட்டயர்ட் ஹேர்ட்' முறையில் 79 ஓட்டங்களில் வெளியேறினார். கோலி 50வது சதம் விளாசி சாதித்தார். இவர் 117 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஸ்ரேயாஸ் (105) சதம் கடந்தார். மீண்டும் களமிறங்கிய சுப்மன் கைகொடுத்தார். சூர்யகுமார் (1) ஏமாற்றினார். இந்திய அணி 50 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 397 ஓட். குவித்தது. சுப்மன் (80), ராகுல் (39) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடின இலக்கை துரத்திய நியூசிலாந்து அணிக்கு கான்வே (13), ரச்சின் (13) ஏமாற்றினர். பின், அணித் தலைவர் வில்லியம்சன், மிட்செல் இணைந்தனர். வில்லியம்சன் அரைச்சதம் கடந்தார். 3ஆவது விக்கெட்டுக்காக 181 ஓட்டங்களைச் சேர்த்தபோது, ஷமி 'வேகத்தில்' வில்லியம்சன் (69) ஆட்டமிழந்தார். லதாம் டக் அவுட்டாகி ஏமாற்றினார். மிட்செல் சதம் விளாசி நெருக்கடி கொடுத்தார். இவரை 134 ஓட்டங்களில் வெளியேற்றிய ஷமி, 5வது விக்கெட்டை கைப்பற்றினார். பின் வந்த வீரர்களும் விரைவில் வெளியேற, நியூசிலாந்து அணி 48.5 ஓவரில் 327 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்ளையும் இழந்தது. இந்தியா சார்பில் ஷமி 7 விக்கெட் கைப்பற்றினார். (ம-7)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2024ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A - 17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |
| A - 18 | வாகனங்களுக்கான ரயர், ரியூப், மற்றும் மின்கலங்கள் |
| A - 19 | பாதணிகள், தோற்பொருட்கள், மழைஅங்கிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B - 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B - 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B - 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B - 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B - 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B - 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், |
| B - 13 | ஒட்டுவேலைகள், உலோகவேலைகள் |
| B - 14 | கழிவகற்றல் சேவை (Gully Emptier service) |
| B - 15 | திண்மக்கழிவு தரம் பிரித்தல் |
| B - 16 | வீதியோரம் வடிகால் பராமரிப்பு சேவை |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

- வழங்கல்கள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பதிற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
- விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2024" எனக்குறிப்பிட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு 20.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சாரதா உருத்திரசம்பவன்
செயலாளர்

(C-7642)


## தகுதியற்ற...

கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்ற தரநிலை சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த சட்டமூலம் தொடர்பான விளக்கத்தை பிரதமர் தினேஸ் குணவர்தன கட்சித் தலைவர்களுக்கு வழங்க உள்ளார். அதற்காக விசேட கட்சித் தலைவர் கூட்டமொன்றும் நடத்தப்படும்.

கட்சித் தலைவர்களுடன் பிரதமர் நடத்தும் கலந்துரையாடலின் பின் சட்டமூலத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் சபையில் இருந்து வெளியேற்றுவதற்கு முடியாத வகையில் சோல்பரியாப்பில் உருவாக்கப்பட்ட விதிகள்தான் இன்னமும் பின்பற்றப்படுகின்றன.

இந்தச் சட்டமூலத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை நீதிமன்றங்களும் வழங்கியுள்ளன."

## 2024 பட்ஜெட்...

தெரிவிக்கையில்,

"அடுத்த வருடத்தின் முதல் காலாண்டு இலங்கைக்கு கடினமான காலமாக அமையும். எனினும், அதனை தொடர்ந்து இலங்கையின் நிலை மேம்படும்.

இலங்கையின் தலா தேசிய வருமானம் கடந்த 2018 ஆம் ஆண்டு 94.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. எனினும், கடந்த ஆண்டு அது 77 பில்லியனுக்கு இறங்கியிருந்தது.

இதனை இந்த ஆண்டில் 85 பில்லியான அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். இவற்றை தொடர்ந்து அடுத்த தலா தேசிய வருமானத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். இதன்படி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2025 ஆம் ஆண்டே ஆரம்பமாகும். இதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு சவால்கள் நிறைந்தது அமைச்சர் விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஓராண்டு காலப்பகுதியில் இலங்கையில் ஏற்படவுள்ள கடுமையான வறட்சி நிலைமை தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஓராண்டு காலத்தில் நாட்டில் கடுமையான வறட்சி ஏற்படக்கூடும் என சர்வதேச வானிலை முன்னறிவிப்புகள் தெரிவித்துள்ளன.

தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு பயிர்களை விளைவிக்க முடியாத நிலை ஏற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மழை பெய்து வந்தாலும் கடந்த காலத்தை விட விவசாயிகள் கடும் வறட்சி நிலையை எதிர்நோக்க நேரிடும் என்பதால் நீர்த்தேக்கங்களில் தேங்கியுள்ள நீரை விவசாயிகள் மிகவும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (5-6)

# கொங்கிறீட் தூண் சரிந்து விழுந்ததில் ஆறு மாணவர்கள் காயம்

## ஒருவர் உயிரிழப்பு


(கொழும்பு)

பாடசாலை நீர்க்குழாய் பொருத்தப்பட்டுள்ள கொங்கிறீட் தூண் சரிந்து விழுந்ததில் 5 மாணவர்கள் காயமடைந்துள்ளதோடு ஒரு மாணவன் உயிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய - வேரகொட கனிஷ்ட வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை ஆறு அடி உயரத்தில் இருந்த கொங்கிறீட் தட்டின் ஒரு பகுதியே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

இதேவேளை காயமடைந்தவர்களில் இரண்டு மாணவிகளும் அடங்குவதாகவும் இவர்கள் முதலாம் தரத்தில் கல்விப்பயிலும் 6 வயதானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் காமடைந்தவர்களில் ஐவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)



# இராசிபலன்

16.11.2023
ஐப்பசி 30, வியாழக்கிழமை
திருதியை பிற்பகல் 1.36 மணிவரை
மூலம் பின்னிரவு 3.41 மணிவரை

சுபநேரம் -7.37-9.07 மணிவரை
இராகு காலம்-1.37-3.07 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
ரோகிணி

வளவன்

**மேஷம்**
அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மகரம்**
மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**ரிஷபம்**
குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்**
எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும், நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**கன்னி**
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு**
சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**மீனம்**
மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல யோசனையைக் கேளாதவர்கள் துன்பம் அடைவார்கள்.

## கடமைகளில் இருந்து விலகிய பொதுச்சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

டெங்குக் கட்டுப்பாட்டு கடமைகளில் இருந்து விலகியுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர். போக்குவரத்துக் கொடுப்பனவுகளை அதிகரிக்காமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரிக்கை விடுத்தே அவர்கள் கடமையில் இருந்து விலகியுள்ளனர். (நி-5-6)

## இலங்கை வந்த இந்திய டீசல் தரமற்றதென ஆய்வில் கண்டறிவு

(கொழும்பு)

இலங்கைக்கு இந்திய எண்ணெய் நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்படவிருந்த எரிபொருள் கப்பலில் இருந்த 19,000 மெற்றிக் தொன் டீசலில் 11,000 மெற்றிக் தொன் டீசல் தரமற்றதாக ஆய்வக சோதனைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

தரமற்ற டீசல் இறக்குமதி பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியம் சட்டபூர்வ கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய சேமிப்பு முனைய கம்பனி ஆகியவற்றின் முகாமைத்துவ பணிப்பாளர் தர்ஷன ரத்நாயக்க ஊடகம் ஒன்றிற்கு கருத்து வெளியிடும் போது குறித்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும், 8400 மெற்றிக் தொன் டீசல் இரண்டு ஆய்வக சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே கொலன்னாவ எண்ணெய் சேமிப்பு முனையத்தில் டீசல் களஞ்சியப்படுத்தப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

## அதிகாரிகளை வரி செலுத்துமாறு கோரி சிவில் சமூக அமைப்புகள் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

உயர் அதிகாரிகளை வரி செலுத்துமாறு கோரி சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி-5-6)




### சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

## எனது 32 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

### நாளை 32 ஆம் வருட பூர்த்தி விஷேட பூஜை வழிபாடுகள்

**காலம் : 16.11.2023 வியாழன் விநாயக சதுர்த்தியன்று**
**நேரம்: பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி விஷேட அபிஷேக பூஜை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.**

"இருந்ததே இருந்து பார்த்தேன். உங்கள் பிரச்சினை தீர்க்க எவருமே இல்லை" ஆளில்லாத காரணத்தினால் நானே வருகின்றேன் என்று அன்று அடியேனுக்குக் கூறியருளிய கண்ணைக் கொத்திய காக்கைப் பிள்ளையாரப்பா! இன்னும் தாமதம் ஏனப்பா! இதன் ஆரம்பமும் முடிவும் நீதானப்பா! எழுந்திடுவீர்! அருள் தந்திடுவீர்! சர்வவல்லமை பொருந்திய சுழிபுரம் -பறாளாய் ஈசுர விநாயகரப்பா உம் திருப்பாதம் போற்றி !போற்றி ! போற்றி !!!

**என் அன்பு உள்ளங்களே!**

உங்கள் பிரச்சினையை (தமிழர் தேசிய இனப்பிரச்சினையை) தீர்க்க எவருமே இல்லை என்ற அப்போதைய ஈசுர விநாயகரின் கூற்றை இப்போது யாவரும் ஏற்றுக்கொள்ளுகின்றீர்கள் தானே! அப்படியானால் ஆளில்லாத எங்களுக்கு ஆண்டவன் தான் துணையம்மா. இன்னும் தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற தந்தை செல்வாவின் அன்றைய கூற்றையும் சிந்திப்போமாக.

அந்தக் கடவுள் யாரம்மா? சற்றுச் சிந்திப்போம். நம் நாட்டு (தீராத நோய்) பிரச்சினைக்குரியவர் சர்வ வைத்தியநாதன் ஈசுர விநாயகர் ஒருவரே தான். நம் நாட்டுப் பிரச்சினைக்குரியவர் ஈசுர விநாயகர் ஒருவரே என்று ஐயா அடிக்கடி எழுதுகின்றாரே. எல்லாப் பிள்ளையாரும் தெய்வங்கள் தானே. அதென்ன ஈசுர விநாயகர் மட்டும் தான் தெய்வமோ என்று யாரும் தவறாக நினைக்கக் கூடாது.

எல்லாம் தெய்வம் தான். ஒவ்வொரு தெய்வத்திலும் ஒவ்வொரு சக்தி இருக்கின்றது. ஆனால் நாட்டுப் பிரச்சினைக்குரியவர் ஈசுர விநாயகர் ஒருவர் தான் என்பதை எனது ஆன்மீகப் போராட்டத்தின் மூலம் கண்டுபிடித்த பின்னர் தான் எல்லோருக்கும் அறியத்தருகின்றேன்.

அதாவது டாக்டர்கள் இருக்கின்றார்கள். எல்லா நோய்களுக்கும் எல்லா டாக்டர்களும் பார்க்கமாட்டார்கள். கண்ணுக்கு ஒரு டாக்டர், காதுக்கு ஒரு டாக்டர், மூக்கிற்கு ஒரு டாக்டர் இன்னும் பல்லுக்கும் ஒரு டாக்டர். இப்படி ஒவ்வொரு உறுப்பிற்கும் ஒவ்வொரு டாக்டர்கள் இருப்பார்கள். ஆனால் இவர்கள் எல்லோரும் டாக்டர்கள் தான். இங்கு இரண்டிற்கும் வேறுபாடு என்னவெனில் டாக்டர்களை நேரடியாகக் காணலாம், கதைக்கலாம், விளம்பரப்பலகை மூலம் எந்த நோய்க்கு எந்த வைத்தியம் செய்பவர் என்பதையும் அறிந்துவிடலாம். ஆனால் இங்கே கடவுளை நேரடியாகக் காணமுடியாது. காரணம் கல்லில் தான் கடவுள் இருக்கின்றார். அதனால் ஆன்மீகப் போராட்டத்தின் மூலம் தான் கடவுளைக் காண முடியும். கதைக்கவும் முடியும்.

**வலம்புரிப் பத்திரிகையில் (09.08.2022) ஈசுர விநாயகரின் சூத்திரத்திலே அடுத்த கட்டம் என்ன?**

ஈசுர விநாயகர் நாடு பறிபோமாப் போல ஒரு நிலையை ஏற்படுத்த திருவுளம் கொண்டுள்ளார் என்று ஐயா கூறியிருந்தேன். தற்போது நாட்டில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களையும் நாம் உற்று நோக்கினால் இது நன்றாகப் புலப்படுவதுடன் யாவும் ஈசுர விநாயகரின் திருவிளையாடல்களே என்று எண்ணத் தோன்றுகின்றது.

**எமது தேசிய இனப்பிரச்சினை இது பேசித் தீர்க்கும் பிரச்சினையன்று.**

நாட்டின் இறையாண்மைக்கு ஏற்படும் ஆபத்துக்கள் தெய்வ நிர்ப்பந்தங்களால் மட்டுமே தீரும் தன்மையது. இலங்கையில் இறையாண்மைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் காரணிகளை இரு வகைப்படுத்தலாம்.

01 - இலங்கையின் சமகால அரசியலின் அகநிலைக் காரணி.
02.புறநிலைக் காரணி.

சமகால அரியல் அகநிலைக் காரணி :- இதுவரை நடைபெறாத அரசியல் சண்டைகள் போராட்டங்களாக மாறும். பின் இனக்கலவரமாக மாறும். அரசியல்வாதிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

புறநிலைக்காரணி:- இந்து சமுத்திரத்தின் வல்லாதிக்கப் போட்டிகள் (இந்தியா, அமெரிக்கா, சீனா) ஈசுர விநாயகரின் சூத்திரத்தில் உள்ளவாறு தெய்வம் தன் தெய்வீகத்தை உலகிற்குக் காட்ட நாயையும் எழுப்பி முயலையும் எழுப்பும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் செயற்பாடே தற்போது இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கையில் சீனாவின் உட்பிரவேசங்கள், (ஆராய்ச்சிக்கப்பல், ஆய்வுக்கப்பல், உளவுக்கப்பல் விவகாரங்கள்)

இதுவரை இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒரு மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வந்தது. ஆனால் இலங்கை அரசின் விலாங்கு அரசியல் நடவடிக்கைகளால் தற்போது கண்விழித்துக் கொண்டது இந்தியா. இந்தியா-இலங்கை உறவுகளில் கடும் பாதிப்பு ஏற்படும். இந்தியா இலங்கை மீது சீறி சினக்கும் வெளியுறவுக் கொள்கைகளில் காரசாரமான வாக்குவாதங்கள் ஏற்படும். இலங்கையுடனான இதுவரை கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையை மாற்றியே தீரும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா – சீனா சமகால அரசியல் நிலைப்பாடு பற்றி இந்தியா கூறுவது... **நீ பாத்துட்டுப் போனால் என்ன நீ பாராமல் போனால் என்ன உன்னை நான் பார்த்துக் கொண்டே தான் இருப்பேன்** இன்றுவரை நடந்ததெல்லாம் நாளை மாறலாம் – அந்த ஒருவன் நடத்தும் நாடகத்தை நிறுத்த முடியுமா?...

**சோழியூரான் - பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரை பரிபாலகரும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட அறிவித்தல்!

தேசிய லொத்தர் சபையின் லொத்தர்களின்
இறுதி இலக்கங்கள் இரண்டை
அடிப்படையாகக்
கொண்டு சட்டத்துக்குப் புறம்பான பந்தயம்
பிடித்தல் நாடு முழுவதும் இடம்பெறுவதாக
தகவல்கள் கிடைக்கின்றபடியால் நீங்கள்
இந்தச் செயலில் ஈடுபடுதல்,
உற்சாகப்படுத்துதல்,
உதவுதல் அல்லது பங்குபற்றுதல்
சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

**தேசிய லொத்தர் சபையின் தகவல்**

National Lotteries Board

(சி-2166)


## சீனியை அதிக விலைக்கு விற்றால் அறிவிக்க தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக சீனியை விற்பனை செய்தல் மற்றும் கொள்வனவின் போது ரசீத்து வழங்கப்படவில்லை எனில் 1977 என்ற இலக்கத்திற்கு முறைப்பாடு செய்ய முடியும் என பொது மக்களுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சீனி தொகை கைப்பற்றப்பட்டு கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)


## அருள்மிகு சபரி ஐயப்பன் திருக்கோவில் சில்வா வீதி வட்டக்கச்சி

வருடாந்த மகரஜோதிப் பெருவிழா வருகின்ற கார்த்திகை மாதம் 1 ஆம் திகதி அதாவது 17.11.2023 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் ஐயப்பன் விரதம் அனுஷ்டிக்கவிருக்கும் அடியார்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் இடம்பெற்று எம்பெருமான் வீதி உலா வரும் கண்கொள்ளாக் காட்சியையும் கண்டு களித்து தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வர பூஜையான அன்னதான நிகழ்விலும் கலந்து கொண்டு ஐயப்பனின் திருவருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டி நிற்கின்றோம்.

குறிப்பு: ஐயப்பன் விரதம் அனுஷ்டிக்கவிருக்கும் அடியவர்கள் நேரகாலத்துடன் தங்களது பெயர்களை ஆலயத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


மேலதிக விபரங்களுக்கு குருசாமி - 077 408 4667
நிர்வாக சபை - 077 704 0975

(சி-7639)

ஆலய பரிபாலன சபையினர்.



## சேவைநயப்பும் மணிவிழா வாழ்த்தும்



Best Wishes

**திரு. கந்தையா ரவிச்சந்திரன் (SLPS-II)**

(கலைப்பட்டதாரி (B.A) பட்டப்பின் கல்வி டிப்ளோமா(PGDE)

யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

**சேவை விபரம்:**

யா/அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (ஆசிரியர்)
1988.08.17-2004.02.05
யா/ஒஸ்மானியா கல்லூரி (ஆசிரியர்)
2004.02.06-2010.06.22
யா/திருநெல்வேலி றோ.க.த.பாடசாலை (அதிபர்)
2010.06.23 - 2019.09.01
யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை (அதிபர்)
2019.09.02 - 2023.10.26

அகவை அறுபதில் அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது அதிபரின் ஓய்வுக்காலம் சீரும்சிறப்புமாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.


(17874)

வாழ்த்துவோர்: பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.



யா/குருசாமி வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. M.சாந்தன் சத்தியகீர்த்தி**

BFA, PGDE, Dip in Community Developments & Management, Dip in Educational Management, Certificate in Human Rights MA(Gandhian Thought) M.Ed.(2nd upper)

Congratulations

எமது பாடசாலையில் கடமையாற்றும் மேற்படி ஆசிரியர் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்று 16.11.2023 இன்று கடமையேற்பதையிட்டு இவரை மனதார பாராட்டுவதுடன் இவரின் பணி மென்மேலும் சிறப்படையவும் மேலும் பல பதவிகள் பெற்று உயர்வடையவும் வாழ்த்துகின்றோம்.

(17879)

ஆசிரிய நலன்புரிக் கழகம்,
யா/குருசாமி வித்தியாலயம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சி.வசந்தரூபன்**
MEd(Hons), MA(Dist), BA, PGDE, Spl.Trd.Fsc, Dip.in.Fsc



**திரு.கு.துஷ்யந்தன்**
MEd(Hons), MA, BA, PGDE, Dip.in.Ed.Mgt.



**திரு.ச.கிருசாந்தன்**
BIT, NDT.in.English



**திருமதி. கௌ.உதயதாஸ்**
BA(Hons) Economics, PGDE

எமது பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இன்று 16.11.2023 வியாழக்கிழமை முதல் இலங்கை அதிபர்சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெறும் மேற்படி ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் அவர்களின் சேவை மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.


பாடசாலை நலன்புரிக்கழகம் யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி. புத்தூர்.

(சி-7638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் தி

# மணிவிழா வா



## தன்னம்பிக்கை கொண்ட சிறந்த அதிபர்

கிளிநொச்சி என்னும் அழகிய நகரில் அமைந்த பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்வது கிளி/கிளி நொச்சி ம.வி ஆகும். இப்பாடசாலையின் முன்னேற்றம், வளர்ச்சி, மாணவர்களின் ஒழுக்கம், கல்வி வளர்ச்சி என்பவற்றிற்கு அயராது பாடுபட்டவர் அதிபர் அவர்களே. தன்னம்பிக்கை, கண்டிப்பு மிக்கவராகவும் திகழ்ந்தார். கல்வி ஞானம் மிக்க அதிபராகவும், மாணவர்களை நேர்வழிப் பாதையில் நடத்துபவராகவும் கல்வியுடன் இணைப்பாடவிதானச் செயற்பாடு களிலும் வளர்ந்தோங்க வைத்த திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் அவர்களுக்கு ஆசிகளும் மணிவிழா வாழ்த்துக்களும்.

**சிவஸ்ரீ ஜெக.ஜெகதீஸ்வரக்குருக்கள் J.P.**



## பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி

கிளிநொச்சியின் மணிமுடியாம் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், தன்னுடைய அதிபர் திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் மூலம் தனக்கான இன்னும் ஓர் வைரமுடியை தன் பெருமைகளுக்குள் ஒன்றாக தன் சிரசில் சூடிக் கொள்கின்றது. பணி சார்ந்த அனுபவம், முதிர்ச்சி, நிர்வாகத்திறன் என எல்லாம் ஒன்று சேர இம் மாவட்டத்தில் இருந்து அதிகமான வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்த பெருமை இவருக்குரியது. இறைவனால் ஆசீர்வதிக்கப் பட்ட இவர் இம் மாவட்டத்திற்கு கிடைத்தமை இறையருளே ஆகும். இவர் பணி ஓய்வுக்காலத்திலும் தொடர இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்கட்டும்.

**அருட்திரு. அன்ரனி வின்சன் சில்வெஸ்ரர் தாஸ் பங்குத்தந்தை,**
**கிளிநொச்சி நகர்.**



## அதிபர்களுக்கு முன்னுதாரணமானஅதிபர்

சேவைக்காலத்தின் இறுதி 8 வருடங்கள் இவருக்கு சவாலாகவே அமைந்தது. சமூக நிந்தனைகளுக்கும் புறங்கூறல்களுக்கும் அஞ்சி ஒடுங்கி நிலைகுலைந்து போகும் சாதாரண பெண்மணியாக அன்றி அவை அனைத்தையும் மிக நிதானமாக எதிர்கொண்டு அத்தனை நிந்தனைகளுக்கும் தன் பணியின் நேர்த்தியாலேயே பதிலடி வழங்கிய இவரது ஆளுமையின் வீரியத்தைக் கண்டு நான் அதிசயித்திருக் கின்றேன். அந்த துணிச்சல் மிகு செயல்நோக்குத்தான் அத்தனை அதிபர்களுக்கும் முன்னுதாரணமானது. பணி நிறைவின் பின் அவர் சமூகப் பணிகளில் ஈடுபடவும் நிறைவோடும் மகிழ்வோடும் வாழவும் வாழ்த்துகின்றேன்.

**சி.சிறீதரன்,**
**பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.**



## அரும்பணியாற்றிய அதிபருக்கு மணிவிழா வாழ்த்துக்கள்

35 வருடகாலமாக கல்வியுலகிற்கு மிகப்பெரிய சேவை செய்தவர். அரச சேவையிலுள்ளவர்கள் ஓய்வு பெற வேண்டியுது கட்டாயமாயினும் திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் செய்த சேவையே அவர்களை நினைவுபடுத்தும் அதனையே வள்ளுவர் "தக்கார் தமதிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்கிறார். அதற்கேற்ப தன் பணிகளால் இப்பாடசாலை அவரை நினைவு கொள்ளும்படி செயலாற்றிய திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் அவர்களுக்கு எனது மணிவிழா வாழ்த்துக்கள்.

**திரு.தி.ஜோன்குயின்ரஸ், மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்.**

**அனுசரணையாளர்கள்:** (17864)



திருமதி. ஜெயந்தி தன

SLPS-I (E

நியமனத் திகதி 06
சேவைக்காலம் 35 வருடம்

ஆசிரியர் 01வருடம்
ஆசிரியமாணவி 0
அதிபர் 32 வ

கிளி/பல்லவராயன் கட்டு இ.த.க.பாடசாலை
கிளி/நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை ஆ
யாழ்/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்க
01.01.1990-31.1
கிளி/நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை ஆ
கிளி/நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை அ
யாழ்/கோப்பாய் கந்தவேள் வித்தியாலயம்
கிளி/வன்னேரிக்குளம் ம.வி அதிபர்
கிளி/நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை அ
கிளி/புனித திரேசாள் பெண்கள் கல்லூரி
கிளி/கிளிநொச்சி ம.வி அதிபர் 0
வெளிநாட்டுப்பயிற்சி 09.03
29.03.2003 கொங்கே


**எழிலகம் விற்பனை நிலையம்**
021 228 5960
077 820 2473
Ezhilagam Trade Centre
Railway Station Road, Kilinochchi.
புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி.

**HARE KRISHNA HARDWARE**
**ஹரே கிருஷ்ணா ஹாட்வெயார்**
இல-15/2, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
No-15/2, Kanagapuram Road, Kilinochchi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம் அவர்களின்

# வாழ்த்துச் சிறப்பு மலர்




## தி தனபாலசிங்கம்

## PS-I (BEd)

த் திகதி 06.08.1988
35 வருடம் 3 மாதம் 11 நாள்

ர் 01வருடம் 04 மாதம்
யமாணவி 02வருடம்
திபர் 32 வருடம்

பாடசாலை ஆசிரியர் 06.08.1988-09.05.1989
டசாலை ஆசிரியர் 10.05.1989-31.12.1989
ர் பயிற்சிக்கலாசாலை ஆசிரியமாணவி
1.1990-31.12.1991
டசாலை ஆசிரியர் 04.01.1992-31.05.1993
டசாலை அதிபர் 01.06.1993-08.01.2003
த்தியாலயம் அதிபர் 09.01.2003-11.05.2003
ம.வி அதிபர் 12.05.2003-31.12.2003
டசாலை அதிபர் 04.01.2004-21.10.2004
ர் கல்லூரி அதிபர் 23.10.2004-02.07.2015
வி அதிபர் 03.07.2015-17.11.2023
யிற்சி 09.03.2003 தொடக்கம்
3 கொங்கோங், மாக்கோ

### மாணாக்கர் கல்விக்காக அரும்பணியாற்றியவர்



பூநகரிப் பிரதேசத்தின் புகழ்பூத்த குடும்பத்திலி ருந்து ஆசிரிய சேவைக்கு வந்து முன்னணிப் பாட சாலைகளில் நீண்ட காலமாக அதிபராக இருந்து சிறந்த மாணாக்கர்களை உருவாக்கியதோடு பல சாதனைகளையும் நற்பணிக ளையும் செய்துள்ளார்.

கண்டிப்பும் கனிவும் ஒருங்குசேரப் பெற்ற திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் அவர்களுக்கு மணி விழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகம் மகிழ்கின்றேன்.

**திருமதி.றூபவதி கேதீஸ்வரன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி மாவட்டம்.**


### மணிவிழா நாயகியின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துக்கள்



கிளிநொச்சி மகாவித்தியாலயம் எமது மாவட்டத்தில் சிறப்பான செயற்பாடுகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்ற பாடசாலையாகும். இப்பாடசாலையின் அதிபராக கிட்டத்தட்ட 8 வருடங்கள் பணியாற்றிய திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம் ஓய்வுழைச்சல் இல்லாமல் இப்பாடசலையின் வளர்ச்சிக்காக பணியாற்றியமையை இவருடைய காலத்தில் இப்பாடசாலை அடைந்த அடைவு மட்டங்களூடாக அறிந்து கொள்ளலாம். இவருடைய ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்.

**கி.கமலராஜன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி தெற்கு.**

### பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்



கிளிநொச்சி மாட்டத்திற்கே முன்னேற்றம் ஏற்படுத்தி தனது சேவைக் காலத்தை முழுமையாக அர்ப்பணித்த அதிபர் அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன். மாணவர்களின் கல்வியிலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் அடையச்செய்து சிறப்பான நிலை அடைவதற்கு பல வழிகளிலும் உழைத்து பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியமைக்கு நன்றியுடன் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பாடசாலைச் சமூகத் தோடுடன் இணைந்து ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கு செவிசாய்த்து பாரபட்சம் காட்டாது வழிநடத்திய பெருமைக் குரியவர். இவரின் வாழ்வு சிறக்க வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

**வைத்திய கலாநிதி. திரு.மா.குகராசா,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்.**

### நிர்வாகத்திறன் கொண்ட அதிபருக்கு வாழ்த்துக்கள்



மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விப் பணியாற்றிய பெருந்தகை திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம் அவர்களாவார். இவரைப்போல எமது பாடசாலை ஆசிரியர்களின் இன்பதுன்ப நிகழ்வுகளில் பங்குபற்றும் அதிபரை இவருக்குப்பின் நாம் நினைத்துப் பார்க்க முடியாது. கண்டிப்பான நிர்வாகத்திறனும் தனக்குக் கீழ் வேலை செய்யும் ஆசிரியர்கள், ஊழியர்கள் நலனில் அக்கறையும் கொண்ட இவருக்கு மணிவிழா வாழ்த்துக் கூறுவதில் புழுகாங்கிதம் அடைகின்றேன்.

**திரு.இ.பிரபாகரன், தலைவர்,**
**ஆசிரியர்கள், ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்,**
**கிளி/கிளிநொச்சி ம.வி.**

ர
ad,

பிள்ளையார் ஆட்ஸ் அன்
டிஜிற்றல் பிறிண்ட்
கிளிநொச்சி.

**வாழ்த்துவோர்:**
**பாடசாலைச்சமூகம்,**
**கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவுதனில்

தாயின் மடியில் 1981 . 09 . 19



கந்தன் அடியில் 2019 . 10 . 30

## அமரர். பிரதீப் தர்சினி

(திதி-திருதியை)

**கண்முன்னே வாழ்ந்த காலம்**
**கனவாகிப் போனதம்மா**
**எங்கள் குலவிளக்கே**
**கந்தசஷ்டி நாளில்– கந்தன்**
**உன்னை அழைத்தானோ**
**ஆண்டுகள் நான்கு ஆனாலும்**
**உன் நினைவுகள் அழியாதம்மா**

நாகநாதன் வீதி,
கொடிகாமம்.
(சி-7687)
குடும்பத்தினர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 350 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 480 | 600 |
| தக்காளி | 250 | 350 | 360 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 140 | 150 |
| கோவா | 300 | 300 | 260 | 400 |
| கரட் | 350 | 450 | 360 | 500 |
| பூசணி | 100 | 80 | 100 | 120 |
| புடோல் | 200 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 240-280 | 350 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 600 |
| வெண்டக்காய் | 240 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 160 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 280 | 250 | 280 | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 400 | 350 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | 320 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 450 | 450 | 500 |
| வெங்காயப்பூ | -- | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2966

Search for people, places and things

### அஞ்சலி




### தீபக்




### டல்சி




### தயா




### சபிதா




### ராஜேஸ்




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அளம்பில் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி



(நெளுக்குளம்)

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களைப் போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப் படவுள்ள நிலையில் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல பணிக் குழுவினரால் சிரமதான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. குறித்த சிரம்தானப் பணியில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பணிக்குழுவினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிரமதானப் பணியினை முன்னெடுத்திருந்தனர்.


இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர். அத்தோடு மாவீரர் நாளினை நினைவுகூருவதற்கான உரிய இடவசதி இல்லாது தாம் துன்பப் படுவதாகவும் குறித்த காணியை விடுவித்து உதவுமாறும் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-299)

# தொடரும் சீரற்ற காலநிலை

## கிளிநொச்சியில் 15 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்துவரும் கன மழை காரணமாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 15 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் நேற்று நண்பகல் 12 மணிக்கு வெளியிடப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களில் குறித்த விடயம் பதிவாகியுள்ளது.

மேலும், இவர்களில் பத்து குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் உறவினர் வீடுகளில் இடம்பெயர்ந்துள்ளதுடன், ஐந்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சீரற்றகால நிலையினால் வட்டக்கச்சி பகுதியில் கால்வாயுடனான மதகு ஒன்றும் சேதமடைந்துள்ளது.

குறித்த பாதிப்புக்கள் தொடர்பான தகவல்கள் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (நி-5-6-315)

# முல்லை இரட்டை வாய்க்காலில் அதிகம் பிடிபடும் மீன்கள்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் அதிகளவிலான மீன்கள் மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளன.

நந்திக்கடலில் இருந்து இரட்டைவாய்க்கால் ஊடாக முல்லைத்தீவு பெருங்கடற்கரைக்கு சங்கமிக்கும் வாய்க்கால் பகுதியிலே கனமழை காரணமாக அதிகமாக மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. கெழுத்தி, மணலை, சிலாப்பி இன வ்கையை சார்ந்த மீன்களே இவ்வாறு பிடிபடுகின்றன. பொதுமக்களும்வலைகளை வீசி பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6-299)

# வவுனியாவில்

# வான்பாயும் 93 குளங்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் 93 குளங்கள் வான்பாய்வதுடன், 15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.



பெய்து வரும் கனமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால், குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து 93 குளங்கள் வான்பாய்கின்றன. மேலும் பல குளங்கள் வான் பாயும் கட்டத்தை அடைந்துள்ளன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 15 குளங்கள் சிறு உடைப்பெடுத்த நிலையில் அவை தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (நி-5-6-250)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை

திருமதி. சங்கீதா கிருஷாந்
(NDT,BEd, MEd.)




எமது பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய, திருமதி. சங்கீதா கிருஷாந் அவர்கள் 16.11.2023 இன்று இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு நியமிக்கப் படுவதையிட்டு மனமகிழ்ந்து பாராட்டுவதோடு அவரின் சேவை மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

(அ-7641)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.க.தர்மதேவன்
BA,PGDE,MA,MEd,
SLTS-I, SLPS III



திரு.மா.செல்வதாஸ்
BA,BFA,PGDE,MA,
SLTS-2-I, SLPS III

எமது கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி அதிபர் சேவை தரம் III இற்கு நியமனம் பெற்றுச் செல்கின்ற ஆசிரியர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

பணியாளர் நலன்புரிச்சங்கம்
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.

(அ-7640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 330





வைராய மகளுக்கும் பிறந்த மகனுக்கு எப்படித் தகுதி இல்லாமற் போகும்?"

"தகுதி இருக்கட்டும். இராஜ்யத்தின் குடிகள் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டாமா?"

"குடிகளுடைய அபிப்பிராயத்தைக் கேட்பதாயிருந்தால் அவர்கள் உன் தம்பிக்கு உடனே பட்டம் கட்டிவிட வேண்டும் என்பார்கள். அது நியாயமா? அருள்மொழிதான் அதை ஒப்புவானா? அதெல்லாம் வீண் யோசனை, மகளே! எப்படியாவது உன் பெரிய பாட்டியை இங்கே சீக்கிரம் வரும்படி செய். நான் யமனோடு போராடிக் கொண்டிருக்கிறேன் என்று எழுதி அனுப்பு. என்னை உயிரோடு பார்க்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று சொல்லி அனுப்பு."

"அது ஒன்றும் அவசியமில்லை, அப்பா! தஞ்சைத் தளிக்குளத்தார் கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்ற விருப்பம் பெரிய பிராட்டிக்கு இருக்கிறது. அதைக் குறிப்பிட்டு இச்சமயம் வரும்படி எழுதி அனுப்புகிறேன். அதுவரை தாங்கள் அலட்டிக் கொள்ளாமல் பொறுமையாயிருங்கள், அப்பா."

இவ்விதம் கூறித் தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டு குந்தவை தன் இருப்பிடத்துக்குச் சென்றாள். வழியில் அன்னை வானமாதேவியைச் சந்தித்தாள். "அம்மா! இனிமேல் என் தந்தையை ஒரு கண நேரம் கூட விட்டுப் பிரியாதீர்கள். மற்றவர்கள் போய்ச் செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்யட்டும்" என்றாள்.

குந்தவையின் உள்ளத்தில் சில காலமாக ஏற்பட்டிருந்த ஐயங்கள் இப்போது கொஞ்சம் தெளிவு பெறத் தொடங்கியிருந்தன. கண் இருட்டாயிருந்த இடங்களில் கொஞ்சம் வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. தன் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் விரோதமாக ஏதோ ஒரு பயங்கரமான மந்திரதந்திரச் சூழ்ச்சி நடைபெற்று வருகிறது என்பதை அவள் அறிவு நன்கு உணர்த்தியது. ஆனால் அது எத்தகைய சூழ்ச்சி, எப்படி எப்படியெல்லாம் இயங்குகிறது என்பதை முழுவதும் அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. சோழ மகா ராஜ்யத்துக்கும்அந்த ராஜ்யத்துக்குத் தன் சகோதரர்கள் பெற்றுள்ள உரிமைக்கும் பேரபாயம் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவள் உணர்ந்தாள். அந்த அபாயத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பெண்பாலாகிய தன்மீது சுமந்திருக்கிறதாகவும் நம்பினாள்.

தாயின் இயற்கைக்கே மாறான இந்தக் காரியத்தில் அவருக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்? மதுராந்தகன் ஏதோ சிவபக்தியில் ஈடுபட்டுச் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தபோது அதற்கு நியாயம் உண்டு. இப்போது அவனுக்கே இராஜ்யம் ஆளும் ஆசை வந்திருக்கும் போது இன்னொருவனுக்கு எப்படிப் பட்டம் கட்டலாம்!"

"அப்பா! இராஜ்யம் ஆள ஆசை இருக்கலாம். அதற்குத் தகுதி இருக்க வேண்டாமா?"

"ஏன் தகுதி இல்லை? மகனாகிய கண்டராதித்தருக்கும் மகாஞானியான மழ

### பதினெட்டாம் அத்தியாயம்
### துரோகத்தில் எது கொடியது?

பழந்தமிழ் நாட்டின் சரித்திரத்தைப் படித்தவர்கள் அந்நாளில் பெண்மணிகள் பலர் சமூக வாழ்வின் முன்னணியில் இருந்திருப்பதை அறிவார்கள். மன்னர் குலத்தில் பிறந்த மாதரசிகள் மிகவும் கௌரவிக்கப்பட்டார்கள். சோழ குலத்தில் பிறந்த பெண்மணிகளும் வாழ்க்கைப்பட்ட பெண்மணிகளும் சொந்தமாகச் சொத்துரிமை பெற்றிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் தரவாரியாகக் கிராமங்களும், நன்செய் புன்செய் நிலங்களும் கால்நடைச் செல்வமும் இருந்தன. இந்த உடைமைகளை அவர்கள் எவ்வாறு உபயோகித்தார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பலர் ஆலயங்களில் தங்கள் பெயரால் பலவிதத் திருப்பணிகள் நடைபெறுவதற்குச் சொத்துக்களை உபயோகப்படுத்தினார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தேவதை



(நேற்றைய தொடர்ச்சி)

கொஞ்சதுாரம் போயி ஊரைக் கடந்ததும் வெள்ளிக் கொலுசை மாட்டி "ஜலக் ஜலக்" ன்னு சத்தம் வர்ற மாதிரி நடக்க ஆரம்பிச்சாள்.

உடனே பக்கத்துல இருக்குற ஒரு மரத்துல இருந்த அந்த வேதாளம் பாய்ந்து வந்து நின்றது. ராஜகுமாரி மீனாவுக்கு அதைப் பார்த்ததும் பயமாகி விட்டது.

இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வேதாளத்தைப் பார்க்காத மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

அந்த நேரம் ராஜகுமாரியின் கண்ணைப் பார்த்த வேதாளம் மின்னல் தாக்கின மாதிரி தடுமாறியது. அதே வேளையில் ராஜகுமாரி சுதாரித்தபடி, தனது இடுப்பில் இருந்த கத்தியைத் தூக்கி வேதாளத்தின் நெஞ்சில் எறிந்தாள். வேதாளத்தின் நெஞ்சு பிளந்து ரத்தம் பீறிட்டது.

வேதாளம் சாகப் போற நேரத்துல ராஜகுமாரியை கூப்பிட்டுச் சொன்னது, "தேவி யாரே! நான் வேதாளம் இல்லை. பக்கத்து நாட்டு அரக்க வம்சத்தவன். உங்கள் ஊரில் செல்வச் செழிப்போடு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதை சீர்குலைக்க எங்கள் ராஜாவால் வேதாளம் வேஷம் போட்டு அனுப்பப் பட்டவன் நான்" என்று சொன்னான். இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் உயிர் பிரிந்தது.

நாடே ராஜகுமாரியைப் புகழ்ந்தது. வீரத் திருமகள்னு அவளை முடிசூட்டி இளவரசி ஆக்கினார்கள்.

"என்னடா பேரப் புள்ள அந்த ராஜகுமாரி மாதிரி நீயும் நல்லா படிச்சி வீரமா, நல்ல தைரியத்தோடு, எதுக்கும் பயப்படாம இருக்கணும் என்ன!" என்று தாத்தா கேட்க, "கொர் கொர்" என்ற குறட்டையுடன் கணேஷ் தூங்கிக் கொண்டிருந்தான்.

விடியற்காலை ஐந்து மணிக்கு படிப்பதற்காக கணேஷை எழுப்பி விட்டார். கணேஷும் எழுந்து முகம் கழுவிவிட்டு வந்து புத்தகத்தை எடுத்தவாறு தாத்தாவிடம் கேட்டான்.

"என்ன தாத்தா! ராத்திரி நீங்க ஏதோ ராஜா, ராஜகுமாரி, வேதாளம்னு சொன்னீங்க. ஆனா எனக்கு முழுக்கதையும் ஏன் சொல்லலை?" என்று கேட்டான்.

தாத்தா கலகல வென்று சிரித்து விட்டார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனதையும் புத்தியையும் அன்பு மற்றும் பரிவோடு ஆளத் தெரிந்தவரே பிறரை வழிநடத்தத் தகுதியானவர்.
- *பிரம்மா குமாரிகள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு உணர்த்துகின்ற உட்பொருள்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரல் ஆகியோரே காரணம் என உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கமே பொறுப்பு என்று தீர்ப்பிடுமாறும் அவர்களிடம் இருந்து இழப்பீட்டைக் கோரியும் தொடுக்கப்பட்ட வழக்கின் மீது விசாரணை நடத்திய உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் (14) மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த நாடு இந்தளவு தூரம் கந்தறு நிலைக்கு வருவதற்கு யார் காரணம் என்பதை உயர் நீதிமன்றத் தீர்ப்பு தெளிவுபடுத்தியதனால் இலங்கையின் வரலாற்றில் நாட்டை மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்குள் கொண்டு வந்தவர்கள் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரல் ஆகியோர் என்பதை மகாவம்சத்தின் பின்னிணைப்பாக இந்த நாட்டின் வரலாற்றாசிரியர்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

தவிர, இலங்கையின் வரலாற்றில் உயர் நீதிமன்றம் வழங்கிய இத்தீர்ப்பானது, இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கு ஒரு முக்கியமான விடயம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது நாட்டை ஆளவேண்டும் என்ற பதவி ஆசை மட்டும் இருத்தலாகாது. மாறாக நாட்டைச் சரியான பாதையில் வழிப்படுத்திச் செல்ல வேண்டும். இல்லையேல் அதற்கான தண்டனையை அனுபவித்தாக வேண்டி வரும் என்பதே அந்த அறிவுறுத்தலாகும்.

இவை ஒருபுறமிருக்க, இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தவர்கள் யார் என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எவரும் தீர்ப்பாக மட்டும் பார்த்துவிடக்கூடாது.

மாறாக, அதற்குள் நிறைந்த உபதீர்ப்புகள் தோன்றாய் எழுவாய் போல மறைந்துள்ளன.

ஆம், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு யார் காரணமானவர்களோ அவர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சூறையாடியுள்ளனர்.

.அதேநேரம் இவர்களின் ஆட்சியானது, அநீதியானது. நாட்டு மக்களைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை.

தவிர, குடும்ப ஆட்சி இந்த நாட்டை கந்தறுத்துள்ளது. ஆகையால் எதிர்காலத்தில் இலங்கையின் ஆட்சி அதிகாரம் குடும்ப அரசியலுக்குள் அகப்பட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பன தீர்ப்பின் பொழிப்பாய் அமைகிறது.

இதற்கும் மேலாக, உயர்நீதின்றம் வழங்கிய தீர்ப்பில் இருந்து சர்வதேசம் ஒரு தீர்க்கமான முடிவை எட்டுவதற்கும் அது வாய்ப்பளித்துள்ளது.

அதாவது 2009ஆம் ஆண்டில் தமிழின அழிப்பு போர் நடந்துள்ளது.

எனவே மகிந்த ராஜபக்ஷ தரப்பு போர்க்குற்றம் புரிந்துள்ளது. ஆகையால் சர்வதேச விசாரணை அவசியமாகிறது என்ற முடிவை சர்வதேச சமூகம் நிறுதிட்டமாக எடுக்க முடியும்.

# இந்தியக் கலைஞர்களை வரவழைப்பது சுதேசியக் கலைஞர்களை மலினப்படுத்தும்

## சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

கலைத்துவப் பாரம்பரியமும் அடையாளமும் மிக்க எங்கள் மண்ணின் கலைஞர்களைப் புறக்கணித்து, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்சார் கலைகள் அத்தனைக்கும் தென்னிந்தியக் கலைஞர்களை முன்னிலைப் படுத்தும் "இறக்குமதிக் கலாசாரம்" யாழ்ப்பாணத்தில் முகிழ்ப்புப் பெற்றுள்ளமை இந்த மண்ணின் சுதேசியக் கலைஞர்களையும் இளைய தலைமுறைத் திறமையாளர்களையும் மலினப்படுத்துவதாகவே உள்ளது என் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

அண்மையில், கைதடியில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இருப்பழிந்து போய்க் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களது பண்பாட்டுத் தொடர்ச்சியை மீள நிலை நிறுத்துவதில் கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் பெரும் பங்கிருக்கிறது.

அத்தகையதோர் சூழலில் துறைசார் ஆற்றலர்கள் தம்மைத்தாமே நிலை நிறுத்துவதற்குரிய தளங்களற்று இருக்கையில், மக்கள் திரட்சியை அதிகரிப்பதற்காக எங்கள் மண்ணின் ஆலயங்கள், அமைப்புகள் என்பவற்றில் பெரும்பாலானவை தென்னிந்தியக் கலைஞர்களுக்கும், மக்களிடையே பரிச்சயம் மிக்க பிரபலங்களுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்ற நிலை மாற்றம் பெற்று, அந்தந்த மண்ணின் கலைஞர்களுக்கும், இளைஞர்களுக்கும் அவர்களது கலைத்திறனுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-5-6)

# புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறு பட்டியலிடும் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சைக்காக 33, 7591 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# கிரிக்கெட் சபையின் சாட்சிகளை கட்டுப்படுத்த முயற்சி

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கோப் குழுவின் தலைவருக்கு கிரிக்கெட் சபையின் சாட்சிகளை கட்டுப்படுத்த முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட் அணியை தடைசெய்யுமாறு ஐ.சி.சிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபையினால் தான் இதற்கான தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தேச விரோதமான செயற்பாடாகும். கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமன்றி 220 இலட்சம் மக்களுக்கும் இழைக்கப்பட்ட பாரிய துரோகமாகும்.

இதுதொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு சென்று இந்த தரவுகளை வழங்கியது யார் என்பதை கண்டறிய விசாரணை நடத்த வேண்டும்.

மேலும், கோப் குழுவின் முன்னிலையில் கிரிக்கெட் சபை முன்னிலையானபோது, கோப் குழுவினர் தலைவர் ரன்ஜித் பண்டார, யாரோ ஒருவரை பார்த்து பதில் வழங்க வேண்டாம் என சைகை காண்பித்த காட்சிகளை நாம் ஊடகங்கள் வாயிலாக பார்த்தோம்.

கோப் குழுவின் தலைவர் பொருத்தமாகவோ அல்லது பொருத்தமற்ற வகையிலோ சாட்சியாளர்களின் பதிலை கட்டுப்படுத்த முயன்றுள்ளார்.

இது பாரதூரமான விடயமாகும். சபாநாயகர் இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

கோப் குழுவின் அங்கத்தவர்களாக உள்ள ஹேஷா விதானகே மற்றும் எஸ்.எம்.மரிக்கார் உள்ளிட்டவர்களின் சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளது. கோப் குழுவின் தலைவருக்கு கிரிக்கெட் சபையின் சாட்சிகளை கட்டுப்படுத்த முடியாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மதுபானங்களின் விலை மீண்டும் அதிகரிப்பு?

(கொழும்பு)

மதுபான அனுமதிப் பத்திரக் கட்டண அதிகரிப்பானது மதுபானங்களின் சில்லறை விற்பனை விலையில் பாதிப்பை ஏற்படுத்தாது என கலால் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மதுபான அனுமதிப் பத்திர கட்டண அதிகரிப்புடன் மதுபானங்களின் விலையை அதிகரிக்க முடியாது.

மற்ற வணிகப் பொருட்களை ஒப்பிடுகையில், உள்ளூர் சந்தையில் மது விற்பனை குறைந்துள்ளது.

"இருப்பினும், நாட்டில் சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்து வருகிறது. எனவே, சட்டப்படியான மதுபான உற்பத்தியை தொடரவும், சட்டத்தை கடைப்பிடித்து அதை ஒழுங்குபடுத்தவும் கலால் திணைக்களம் முடிவு செய்துள்ளது எனவும் தெரிவித்தார். (நி-5-6)

# தங்கம் கடத்தினால் தண்டனை

## இலங்கை சுங்கம் தீர்மானம்

(கொழும்பு)

தங்கம் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் உட்பட தடை செய்யப்பட்ட பொருட்களை கடத்துபவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகளை விதிக்க இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, முதல் 10 மாதங்களுக்குள் 760 பில்லியன் ரூபாய் வசூலித்துள்ளதாகவும் இந்த வருடத்துக்குள் 925 பில்லியன் ரூபா வருமானத்தை திரட்ட முடியும் எனவும் இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது.

(நி-5-6)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

**"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை"**

*- சார்ள்ஸ் டார்வின்(பரிணாமவியலின் தந்தை)*

# 21 இந்திய மீனவர்கள் விடுதலை ஒருவருக்கு சிறைத்தண்டனை

(அராலி)

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 21 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் ஒருவருக்கு சிறை தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற் பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

இதையடுத்து குறித்த 22 மீனவர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். இவர்களில் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய நிலையில் அவருக்கு சிறை தண்டனை விதித்தும் ஏனைய 21 மீனவர்களை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார். (நி-5-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர் சேவை தரம் III இற்கு நியமனம் பெறும் எமது
பாடசாலை ஆசிரியர்களான





திரு. சிங்காரவேலு சிவலோகநாதன் B.Sc,PGED

திருமதி ராதா ஜெகதீஸ்வரன் B.Ac(Hons),M.Ed

(17892)

ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்


# BRIDGE செயற் திட்டத்தின் உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் கிறிசலிஸ் நிறுவனத்தினால் வடமாகாணம் தழுவி நடத்தப்படும் பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களினூடான அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தும் BRIDGE செயற் திட்டத்தின் உத்தியோகபூர்வமான அறிமுக நிகழ்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கிறிசலிஸ் திட்ட முகாமையாளர் ம.பிரபாகரன் கிறிசலிஸ் பற்றிய சுருக்கமும் அதன் முக்கிய பணிகள் பற்றிய விளக்கமும் BRIDGE திட்ட அறிமுகமும் வழங்கினார்.

சமூக பொருளாதார ஆலோசகர் செல்வின் இரணியஸ் "பிராந்திய அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்துவதற்கு பெண்கள் இளைஞர்களை ஈடுபடுத்துதல் மற்றும் வலுப்படுத்தலின் முக்கியத்துவத்தினையும்" யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்டத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் "உள்ளடங்கலான அபிவிருத்தியின் பங்காளிகளாக இருப்பதற்கு பெண்கள் இளைஞர்கள் மற்றும் விளிம்பு நிலை சமூகங்களின் உரிமைகள் தொடர்பாகவும்" உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் பெண்கள் மற்றும் ஆண் தலைவர்களின் அனுபவப் பகிர்வும் இடம்பெற்றது. (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

4.11.2023 அன்று அதிபர் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட எமது கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகளான









திரு. தருமராஜா மகிந்தன் | திருமதி பிறேமினா ஜெகன் | திருமதி கிருஸ்ணசாந்தி சிவராஜ் | திருமதி வராகி சுதாகரன்

ஆகியோரை பணி சிறக்க மனமுவந்து வாழ்த்துவதோடு மென்மேலும் பல பதவிகள் பெற்று பணியாற்ற கல்லூரி சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்
யா/வடமராட்சி இந்து மகளீர் கல்லூரி, பருத்தித்துறை

(C-7646)



## மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திரு. சின்னப்பு சதீஸ் NDT (Sci), B.A, PGDE



திருமதி தயாசந்திரிக்கா கோபாலகிருஸ்ணன் B.Sc, PGDE



திருமதி தாரணி குமாரகுலசிங்கம் B.Sc, PGDE



திரு. ஜெயசிங்கம் உதயன் B.Sc (with Edu), M.Sc, PGDE



திரு. தெய்வேந்திரம் சசிரங்கன் B.Sc, PGDE, MED



திரு. சிவலோகநாதன் சிவசங்கர் NDT, B.Com, PGDE

எமது கல்லூரியில் ஆசிரியர்களாக சேவையாற்றி அதிபர் சேவை தரம் III இல் நியமனம் பெற்ற அதிபர்களை மனம்மகிழ்ந்து வாழ்த்துவதோடு இவர்களது கல்விப் பணி மேலும் சிறக்க எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர் :-
நலன்புரிக் கழகம்
யா/வட்டு இந்துக்கல்லூரி
சித்தன்கேணி

(17891)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 மில்லி...

கொண்டே யாழ்ப்பாணத்தில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அச்சுவேலியில் 175.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பருத்தித்துறையில் 170.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தெல்லிப்பழையில் 139.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் மீசாலையில் 133 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தொல்புரத்தில் 118 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகி உள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் மத்தியில் 68.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் கோட்டை பகுதியில் 58.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் சாவகச்சேரியில் 34.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் அம்பனில் 24.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நயினாதீவில் 6.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நெடுந்தீவில் 2.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

மேலும் கிளிநொச்சியில் 99.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் ஆனையிறவில் 56.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் அக்கராயனில் 128.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-7,33,104)

## இழப்பீடு...

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் உரிய முறையில் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் பொறுப்புடையவர்களிடம் இருந்து பணத்தை மீட்கும் பணியை இப்போதே ஆரம்பிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்போதைய ஜனாதிபதியாக செயற்பட்ட மகிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர்கள் மற்றும் அவர்களுடன் பணியாற்றிய பலரால் அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டதனாலேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இழப்பீடு வழங்குமாறும் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை திறைசேரிக்கு கொண்டு வரும்படியும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## காற்றமுத்த...

படகுகள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியை சுற்றி அந்தமான் நிக்கோபாரை ஒட்டியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாறி மேற்கு மத்திய வங்காள விரிகுடா கடற்பகுதியில் நிலைகொண்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அந்தந்த கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட கடற்பரப்புகள் கொந்தளிப்பாகவோ அல்லது மிகவும் கொந்தளிப்பாகவோ காணப்படும் எனவும், பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் குறித்த பகுதிகளுக்கு கடற்றொழில் மேற்கொள்ள வேண்டாம் என மீனவ மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு கடற்றொழில் மற்றும் கடல்சார் சமூகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கையிடம்...

இயற்கை வள அமைச்சகத்திற்கு சொந்தமானது. Xiang Yang Hong 03 கப்பல் 99.06 மீற்றர் நீளம் கொண்ட பல்நோக்குக் கப்பலாகும்.

இதேவேளை, இந்தியாவின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு வருகை தந்த Shi Yan 6 கப்பல் மீண்டும் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என தானியங்கி அடையாள கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், Shi Yan 6 மீண்டும் நாட்டிற்கு வருகை தருவது குறித்து அமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. (ம-7)

## நூறு...

திட்டம் குறித்த பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி 133 பில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளார்.

அதேநேரம் புதிய வரிகள் ஊடாக 800 பில்லியன் ரூபாயை அறவிட திட்டமிடப்பட்டுள்ளது.

உதாரணமாக சம்பளம் 100 ரூபா அதிகரிக்குமாயின் வரி 600 ரூபாயாக அதிகரிக்கும். வரி அறவிடப்படாத 100 பொருட்களுக்கு வரி அறவிடப் போகின்றனர்.

தொலைபேசி, கணனி, அனைத்து மின்சாதன பொருட்களுக்கும் வரி அறவிடப்போகின்றனர்:

அதேநேரம் அனைத்து மருத்துவ உபகரணங்களுக்கும் 18 வீதம் வரி அறவிடப்படப் போகிறது.

தேயிலை கொழுந்து உள்ளிட்ட மேலும்பல பொருட்களுக்கு வற் வரியை அறவிடப்போகின்றனர்.

எனினும் இது எவற்றையும் ஜனாதிபதி வரவு செலவு திட்ட உரையில் வெளியிடவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3541 — சீட்டிழுப்பு திகதி 15.11.2023 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 29 55 63 69 — A — 02165 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.11.15 — சீட்டிழுப்பு இலக்கம் 1329 — E 08 14 50 74 E — Double Chance 39058

Lucky 7 லக்கி — திகதி 15.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0125 — L7 இலக்கம் 1 5 — வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 1 6 2 5 2 0

HANDAHANA ஹந்தஹன உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0608 — மகரம் 25 32 36 45 மகரம் — 20032 — 21

மெகா பவர் — திகதி 15/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1647 — N 19 28 45 75 80 — 57673 — www.nlb.lk

மஹஜன சம்பத — திகதி 2023/11/15 — சீட்டிழுப்பு இலக்கம் 5299 — M 0 8 0 5 2 8 — தேசிய லொத்தர் சபை

யாழ் நாக அதிஷ்ட சுரபி
34 இலட்சம் 6 தினத்தில்
யாழ் நாக அதிஷ்ட சுரபியின் பிரதான யாழ் முகவர்களான கனகலிங்கம் திலகவதி மூலம் 6 தினங்களில் வழங்கப்பட்ட பரிசு விபரம்
- 2023/11/09 அன்று இடம்பெற்ற முதலாவது சீட்டிழுப்பில் **சுபரி தன சம்பத** லொத்தரில் **க.திலகவதி** மூலம் ரூபா. 200,000 மற்றும் ரூபா. 100,000 உட்பட **ச.கனகலிங்கம்** NLB முகவரோடு இணைந்து அன்று மட்டும் இதர பரிசாக ரூபா 325,000 வெல்லப்பட்டது.
- 2023/11/10 அன்று **கனகலிங்கம்** முகவரினூடாக NLB **ஹந்தகன** லொத்தர் சீட்டிழுப்பில் **ரூபா.50 000** உட்பட அன்று DLB முகவர் **க.திலகவதியுடன்** இணைந்து இதர பரிசாக ரூபா.**510,000** வெல்லப்பட்டுள்ளது.
- 2023/11/11 அன்று NLB முகவர் **கனகலிங்கம்** ஊடாக **கொவிசெத** லொத்தர் மூலம் ரூபா.250,000 வெல்லப்பட்டது.DLB முகவர் **க.திலகவதியுடன்** இணைந்து அன்று மட்டும் **ரூபா. 721.000** வெல்லப்பட்டது.
- மேலும் 12,13,14 ஆகிய 3 தினத்திலும் NLB முகவர் **கனகலிங்கம்** மூலம் **மஹஜன** வில் ரூபா. 100,000 ம் DLB முகவர் திலகவதியுடன் **சுபரி தன சம்பத**வில் ரூபா.200,000 ம் மற்றும் 3 தினத்திலும் அதிகூடிய இதர பரிசாக **18 இலட்சத்திற்கும்** அதிகமான பரிசுத்தொகை வெல்லப்பட்டுள்ளது.
- மொத்தமாக 6 தினத்திலும் **கனகலிங்கம் திலகவதி** முகவர்களூடாக **34 இலட்சத்திற்கும்** மேலதிகமாக வெல்லப்பட்டுள்ளது.

(17894)
நயினையில் அமுத சுரபி போல் யாழில் நாக அதிஷ்ட சுரபி தொடரும்...

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — திகதி 15.11.2023 — வெற்றி வாரம் 007 — வர்ணம் பசுமை — S 2 0 7 7 8 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,261,395.20 — DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2273 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.11.15 — தினம் புதன்கிழமை — வெற்றி இலக்கங்கள் 15 20 34 62 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,372,900.00

சனிதா Shanida — திகதி 2023.11.15 — வெற்றி வாரம் 4434 — வர்ணம் ஊதா — வெற்றி இலக்கங்கள் 07 13 36 60 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,931,708.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3985 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.11.15 — தினம் புதன்கிழமை — வெற்றி இலக்கங்கள் 16 26 36 56 — மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,660,568/-

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் W 21 05 21 44 63 — சுப்பர் இலக்கம் — 1449 — 2023.11.15 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 465,403,534.20 — DLB தொலை பேசி 011-2 333 546-47

ஜயோதா Jayoda — திகதி 2023.11.15 — வெற்றி வாரம் 1974 — வர்ணம் மஞ்சள் — வெற்றி இலக்கங்கள் 34 37 53 64 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,501,956.00

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2099 — வர்ணம்: ரோஸ் — சீட்டிழுப்பு திகதி: 2023.11.15 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 69,319,288/- — வெற்றி இலக்கங்கள் 19 52 60 76 N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17832)

076 825 7716 (ஆகாஸ்)

# அடுத்த ஆண்டின் சில மாதங்கள் கடினமானவையாகலாம் - ரணில்

அடுத்த ஆண்டின் முதல் சில மாத ங்கள் கடினமானவையாக அமையலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஊடக பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

ஒரே தடவையில் முடியாமற்போனாலும், சிறிது சிறிதாக மீண்டெழ முடியும் என ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

இந்த வருடத்திற்கான உள்நாட்டு உற்பத்தி இலக்கை குறிப்பிடத்தக்க அளவு அடையலாம் என ஜனாதிபதி கூறினார்.

நாடு 2018 ஆண்டின் நிலைமைக்கு இன்னமும் திரும்பவில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

2025 ஆம் ஆண்டிலிருந்தே நாட்டின் சரியான பயணத்தை ஆரம்பிக்க வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தற்போதைய நடவடிக்கைகள் அதற்கான தயார்ப்படுத்தல் மாத்திரமே என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## ஐ.எம்.எப்...

சர் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார். (ம-7)

Pearson International College

Applications are called for English teachers & IELTS tutors

- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommended (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Weekends and weekdays shifts are available. (C-7649)

Email your CV within three days of thisadvertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk

Call +94 74 188 7878 for more info

No.21,3rd Lane, Power house Road, Jaffna.

துயர் பகிர்கின்றோம்



யா/யூனியன் கல்லூரியின் நடனபாட சிரேஷ்ட ஆசிரியர் திரு. ந.குமரவேள் அவர்களின் அன்புத்தாயார்

அமரர்
நடராசா தவமணி

பிறப்பு : 05.11.1947 இறப்பு : 15.11.2023

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் – ஊழியர் நலன்புரிக்கழகம்
யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

(C-7643)

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-7650)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P:077 544 8503

IELTS - New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes.
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17871)

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7650)
0777-068-777
V2 TRAVELS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

வாகன விற்பனை
NP DAB **** எனும் தொடர் இலக்கத்தைக் கொண்ட Super S Service Model TATA வாகனம் விற்பனைக்கு உண்டு. (17889)
077 825 5092

THE OPEN UNIVERSITY OF SRI LANKA

யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்




மனித வள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் 2024/25

மனிதவள முகாமைத்துவ உயர்தர சான்றிதழை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்கள் முகாமைத்துவ துறையில் முகாமைத்துவ கற்கை இளமாணி (BMS Hons) மற்றும் முகாமைத்துவ கற்கை இளமாணி (சிறப்பு) பட்டப் படிப்பில் நேரடியாக நுழைவதற்கு தகுதி பெறுவார்கள் (BMS Hons in HRM/ BMS Hons in Acc & Fin / BMS Hons in Mktg Mgt)

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்

மனித் வள முகாமைத்துவ உயர்தர சான்றிதழை பெற்றுக் கொள்ள வழிவகுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் இணைய விரும்பும் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் முதல்மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு இவற்றுள் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியினைக் கொண்டிருத்தல், அல்லது,
- முப்பது (30) கிரெடிட் கொண்ட SLQF நிலை 1 மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல், அல்லது
- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமமான அல்லது உயர் தகைமைகள்.கொண்டிருக்கல் வேண்டும்.

காலம்
01 வருடம்

மொழி
ஆங்கிலம்/ தமிழ்/ சிங்களம்

(C-7630)

மேலதிக தகவலுக்கு,
யாழ்ப்பாணப் பிராந்தியநிலையம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
Telephone: +94-212223374
Hot Line : +94-706215112
Fax : +94-212221810
E-mail : adjaf@ou.ac.lk

OUSL FMS Faculty of Management Studies

The Registrar
The Open University of Sri Lanka
Nawala, Nugegoda

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org